செய்தி வெளியீடு எண். 36-2017 நாள்: 12.10.2017

## விழுப்புரம் மாவட்டம் வேலைவாய்ப்பு பயிற்சித்துறை மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து 28.10.2017 அன்று விழுப்புரம் காமராஜ் நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், விழுப்புரம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், விழுப்புரம் இணைந்து விழுப்புரம் மாவட்டத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 28.10.2017 அன்று காமராஜ் நகராட்சி மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம் வளாகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில் தமிழகத்தைச் சார்ந்த 100-க்கு மேற்பட்ட முன்னனி வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு 5000-க்கு மேற்பட்ட நபர்களை தேர்வு செய்ய உள்ளனர். இம்முகாமில் 8-ம் வகுப்பு தேர்ச்சி, 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு தேர்ச்சி, பட்டயப் படிப்பு, பட்டப்படிப்பு, பொறியியல் உள்ளிட்ட அனைத்து விதமான கல்வித்தகுதி பெற்றவர்களும் இம்முகாமில் பணிவாய்ப்பு பெற வாய்ப்பு உள்ளது.

இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தங்களது கல்விச்சான்றின் நகல், சுய விவர குறிப்பு (Bio Data) மற்றும் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் கலந்து கொள்ளாம். மேலும், திறன் பயிற்சி பெறுவதற்கான பதிவுகளும் மேற்கொள்ளப்படும். இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள வேலையளிக்கும் நிறுவனங்கள் distemp.vpm@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04146-226417 என்ற விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் தொலைபேசி எண்ணில் தொடர்பு கெள்ளலாம். விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த வேலைநாடுநர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.